வணக்கம்
ஆல் இண்டியா ரேடியோ–புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
செய்தி ஆசிரியர்:வெ.ரத்னம்
வாசிப்பவர்:வசந்தா ஏகாம்பரம்
நாள்:13.5.2012 நேரம்:18.10

---

- நாடாளுமன்றத்தின் 60–ஆவது ஆண்டு விழாவை ஒட்டி இன்று மாலை நடைபெறும் இருஅவைகளின் கலப்புக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திருமதி பிரதீபா பாட்டீல் உரையாற்றுகிறார்.
- நாடாளுமன்றத்தின் இன்றைய சிறப்பு அமர்வில் நாடாளுமன்ற அலுவல்கள் அடிக்கடி தடை படுவதை தவிர்க்க வேண்டியது அவசியம் என்ற கருத்து முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.
- ஜம்மு–காஷ்மீர் ராணுவ முகாம் மோதல் போன்ற சம்பவங்கள் தவிர்க்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் திரு ஏகே ஆண்டனி ராணுவத்திற்கு அறிவுறுத்தி உள்ளார்.
- புதுவையில் உள்ள என்,ஆர் காங்கிரஸ் அரசு தலித்துகளுக்கான நலத்திட்ட நிதியை செலவிடவில்லை என்று அஇஅதிமுக மாநிலச் செயலர் திரு அன்பழகன் குற்றம் சாட்டி உள்ளார்

<><><>

<u>நாடாளுமன்றம்</u>

நாடாளுமன்றத்தின் 60–ஆவது ஆண்டு விழாவை ஒட்டி மக்களவையும் மாநிலங்களவையும் இன்று நடத்திய சிறப்பு அமர்வின் விவாதங்களில், நாடாளுமன்ற அலுவல்கள் அடிக்கடி தடைபடுவதை தவிர்த்து நாடாளுமன்றத்தின் கண்ணியத்தை காக்க வேண்டும் என்ற கருத்து முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

மாநிலங்களவையில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் விவாதங்களை தொடக்கி வைத்துப் பேசுகையில்
அறிவார்ந்த விவாதங்களில் ஈடுபடும் எண்ணம் கவலைக்குரிய விதத்தில் குறைந்து விட்டது குறித்து ஒவ்வொரு உறுப்பினரும் அரசியல் கட்சியும் சிந்திக்க வேண்டும் என்றார். ஜனநாயகத்தில் இந்தியாவிற்குள்ள நம்பிக்கை பற்றி உலக நாடுகள் வைத்துள்ள நல்லெண்ணத்தை காப்பாற்ற வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களவையில் நிதியமைச்சரும் அவை முன்னவருமான திரு பிரணாப்முகர்ஜி பேசுகையில் நாடாளுமன்ற அலுவல்கள் அடிக்கடி தடை படுவதை தவிர்க்க தனி நடைமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்றார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் திருமதி சோனியாகாந்தி விவாதங்களில் பேசுகையில் உலக அளவில் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு உதாரணமாகவே இந்தியா திகழ்வதாக கூறினார்.

மூத்த பிஜேபி தலைவர் திரு எல் கே அத்வானி தமது உரையில் மாறுபட்ட கருத்துக்களையும் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொள்ள நாடு பழகியதற்கே நாடாளுமன்றம் தான் காரணம் என்றார்.

எதிர்கால சவால்களுக்கு நாடாளுமன்றத்தை தயார்படுத்தும் சந்தர்ப்பமாக இந்நாளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மக்களவை எதிர்கட்சித் தலைவர் திருமதி சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தினார்.

சமாஜ்வாதிக்கட்சியின் தலைவர் திரு முலாயம்சிங் யாதவ், ஐக்கிய ஜனதாதளத்தின் தலைவர் திரு ஷரத்யாதவ் திரிணமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு சுதீப் பந்தோபாத்யாய், மூத்த சிபிஎம் தலைவர் திரு பாசுதேவ் ஆச்சாரியா, திமுக–வைச் சேர்ந்த திரு டி கே எஸ் இளங்கோவன், உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள் விவாதங்களில் கலந்து கொண்டனர். சட்டங்களை நிறைவேற்ற வேண்டியது நாடாளுமன்றம் தானே தவிர வெளியில் உள்ள கும்பல்கள் அல்ல என்று கட்சி வேறுபாடின்றி அனைத்து உறுப்பினர்களும் முக்கியமாக வலியுறுத்தினர். இந்த விவாதங்களின் இறுதியில்,ஜனநாயக மதிப்பீடுகளை வலுப்படுத்துவதற்கான கருவியாக நாடாளுமன்றத்தை மாற்றும் விதத்தில் நாடாளுமன்றத்தின் கண்ணியம்,உன்னதம் மற்றும் புனித தன்மையை பாதுகாக்க உறுப்பினர்கள் உறுதி ஏற்பதாக அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. .

<><><><>

ராணுவம்

ஜம்மு–காஷ்மீர் மாநிலம் லே பகுதியில் உள்ள எல்லைப்புற ராணுவ முகாம் ஒன்றில் ஜவான்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே அண்மையில் நடந்த மோதல் போன்ற சம்பவங்கள்எதிர்காலத்தில் தவிர்க்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் திரு ஏ கே ஆண்டனி ராணுவத்திற்கு அறிவுறுத்தி உள்ளார். லே ராணுவ முகாம் மோதல் குறித்து பாதுகாப்பு அமைச்சகத்திற்கு ராணுவம் அனுப்பிய பூர்வாங்க அறிக்கையைத் தொடர்ந்து அமைச்சர் இவ்வாறு அறிவுறுத்தி இருப்பதாக புதுடெல்லியில் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த அறிக்கை மோதலின் பின்னணியில் உள்ள ஒழுங்கீனத்தை மூடி மறைக்கும் விதத்தில் அமைந்திருப்பதால் அமைச்சர் கூடுதல் விவரங்களை கோரி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. லே ராணுவ முகாம் மோதலை ஊடகங்கள் தான் கலகம் போல் சித்தரித்து விட்டதாக ராணுவம் ஏற்கனவே கூறி உள்ளது.

<><><><>

விமானிகள்

ஏர் இண்டியா விமானிகளின் வேலை நிறுத்தம் இன்று 6–ஆவது நாளை எட்டி உள்ள நிலையில் டெல்லி மற்றும் மும்பையில் இருந்து புறப்பட வேண்டிய 20 சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் நூற்றுக் கணக்கிலான பயணிகள் அவதிக்கு ஆளாயினர். வரும் 15–ஆம் தேதி வரை ஏர் இண்டியா நிறுவனத்தின் சர்வதேச விமானங்களில் முன் பதிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
போராட்டத்தில் ஈடுபட்ட 71 விமானிகளை ஏர் இண்டியா நிர்வாகம் பணி நீக்கம் செய்துள்ளது. விமானிகள் சங்கத்தின் நிர்வாகப் பதவிகளில் உள்ள 11 விமானிகளின் உரிமங்களை ரத்து செய்யவும் கோரப்பட்டுள்ளது. போராட்டத்தைக் கைவிட்டால் விமானிகளுடன் பேச அரசு தயார் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு அஜித்சிங் ஏற்கனவே கூறி உள்ளார்.

<><><><>

அஜித்சிங்

2005–ல் ஏர் இண்டியா நிறுவனமும் இண்டியன் ஏர்லைன்ஸ் நிறுவனமும் ஒருங்கிணைக்கப்பட்டதற்கு முன்பாக இரண்டும் லாபகரமாகவே செயல்பட்டு வந்ததால் தற்போது ஏர் இண்டியா நிறுவனத்தை லாபகரமாக செயல்படுத்த முடியும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு அஜித்சிங் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த அவர் 2 நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் 70 சதவிகிதம் நிறைவேறி விட்ட போதிலும் மனிதவள ரீதியில் ஒருங்கிணைப்பு நடக்காமல் போனதே பிரச்சனைகளுக்கு காரணம் என்றார். ஏர் –இண்டியா நிறுவனத்தை தனியார் மயமாக்கும் நோக்கம் அரசுக்கு உள்ளதா என்று கேட்டதற்கு முதலில் லாபகரமாக செயல்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று திரு அஜித்சிங் பதில் அளித்தார். நுகர்வோரை மையமாகக் கொண்ட சிவில் விமான போக்குவரத்து போன்ற சேவைத் துறைகளில் அரசு ஈடுபடுவதில் சில கஷ்டங்கள் இருக்கலாம் என்றாலும் அது அசாத்தியம் அல்ல என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

<><><><>

அன்பழகன்

புதுவையில் உள்ள என்ஆர் காங்கிரஸ் அரசு தலித்துகளுக்கான நலத்திட்ட நிதியை செலவிடாமல் துரோகம் இழைத்துவிட்டதாக அஇஅதிமு மாநிலச் செயலர் திருஅன்பழகன் குற்றம் சாட்டி உள்ளார்.
இன்று புதுவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கடந்த ஆண்டு மாநில அரசின் பட்ஜெட்டில் தலித்துகளுக்கான சிறப்பு கூறுகள் திட்டத்திற்கு 438 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் ஆனால் முதலமைச்சர் திரு ரங்கசாமி இந்த நிதியை இதர துறைகளுக்கு திருப்பி விட்டதாகவும் கூறினார். இதுஅல்லாது தலித்துகளுக்கான மற்றொரு 107 கோடி ரூபாய் திட்டத்திலும் 87 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டதாகவும் தலித்துகளுக்காக ஹட்கோ நிறுவனத்திடம் இருந்து பெற்ற 54 கோடி ரூபாய் செலவிடப்படவில்லை என்றும், அவர் தெரிவித்தார். அரசுத் துறை ஊழியர்களை பணி நீக்கம் செய்வதிலும் தொழிற்சாலைகளை மூடுவதிலுமே முதலமைச்சர் கவனம் செலுத்துவதாக திரு அன்பழகன் குற்றம் சாட்டினார். இதுஅல்லாது செயல்படவே இல்லாத அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களுக்கு, எம்எல்ஏ அல்லாதவர்கள் தலைவர்களாக நியமிக்கட்டதில் 50 லட்சம் முதல் 2 கோடி ரூபாய் வரை லஞ்சம் விளையாடி இருப்பதாக அவர் கூறினார். நிதி நெருக்கடியில் இருப்பதாக கூறிக் கொள்ளும் ஒரு அரசின் இத்தகைய முடிவுகளை துணை நிலை ஆளுநர் அங்கிகரிப்பது விந்தையானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி 55 துறைகளை தமது பொறுப்பில் வைத்துள்ள நிலையில் தலித் இனத்தைச் சேர்ந்த அமைச்சர்களிடம் இருந்து பாசிக்–பாப்ஸ்கோ பாட்கோ போன்ற அரசுத் துறை நிறுவனங்களின் பொறுப்பை பறிப்பதன் மூலம் அவர்களை வஞ்சிப்பதாக திரு அன்பழகன் கூறினார். புதுவையில் தனியார் பள்ளிகள் அரசின் விதிமுறைகளை பின்பற்றுவது இல்லை என்றும் 10–ஆம் வகுப்பில் அதிக தேர்ச்சி விகிதம் காட்டுவதற்காக 9–ஆம் வகுப்பில் நூற்றுக்கணக்கிலான மாணவர்கள் வடிகட்டப்படுவதை அரசு கண்டுகொள்ளவதில்லை என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

<><><><>

புதுவை–கொலை

புதுவை சேதராப்பட்டு பகுதியில் உள்ள கிரானைட் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வந்த அஸ்ஸாமிய இளைஞர் ஒருவர் நேற்று இரவு தொழிற்சாலையின் நீர்த்தேக்க தொட்டி அருகே தலையில் காயங்களுடன் இறந்து கிடந்தது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். அவரோடு
வேலை செய்து வந்த வேறுசில வட இந்திய இளைஞர்களிடம் விசாரணை நடைபெற்று வருகின்ற போதிலும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இறந்து போன இளைஞரின் உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு பொது மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

<><><><>

அதிரடி சோதனை

சென்னையில் திரைப்பட நடிகரும் மாநிலங்களவை உறுப்பினருமான சிரஞ்சீவியின் மருமகன் விஷ்ணுபிரகாஷ்–க்கு சொந்தமான இடங்களில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற அதிரடி சோதனைகளின் போது சில கோடி ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டுள்ளதாக வருமானவரித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த அதிரடி சோதனைகளுக்கும், தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என திரு சிரஞ்சீவி தெரிவித்துள்ளார்.

<><><><>

*மழை*

*வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்திலும் புதுவையிலும் அடுத்த 24 மணி நேரத்திற்கு மழை இருக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலோரப் பகுதிகளில் லேசான மழையும் உள்மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. உசிலம்பட்டி மற்றும் தேனீயில் தலா 7 செமீட்டரும், தர்மபுரி மற்றும் தாளவாடியில் தலா 5 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. கத்திரி வெயிலின் கொடுமைக்கு சற்று ஆறுதலாக இந்த மழை அமைந்திருப்பதாக மக்கள் கருத்து வெளியிட்டு உள்ளனர். சென்னை நகரிலும் இன்று காலை முதலே மேகமூட்டம் நிலவியது.*

<><><><>

*2–ஜி*

*உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட 122, 2–ஜி அலைவரிசை உரிமங்களை வைத்திருந்த நிறுவனங்கள் 2008–ஆம் ஆண்டிற்கு பின்னர் மேற்கொண்ட நிதி மற்றும் மூதலீட்டு செயல்பாடுகள் குறித்து வருமானவரித்துறை விசாரணைகளை தொடக்கி உள்ளது. இந்நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வரி கணக்குகளும் ஆராயப்பட்டு வருவதாக நேரடி வரிகளுக்கான மத்திய வாரியம் புலனாய்வு நிலவரம் குறித்து அண்மையில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. மத்திய ஊழல் தடுப்பு ஆணைய அறிவுறுத்தலின் பேரில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதே பிரச்சனை தொடர்பாக அமலாக்க இயக்குனரகம் மற்றும் மத்திய புலனாய்வுக் கழகமும் விசாரணை நடத்தி வருவது குறிப்பிடதக்கது.*

<><><><>